சக்தங்கள்: நாண்கு

உதயன்

ரூ. 4.00

கடர்: 6 பிரமோதூத ஆடு மாசி மீ 23 உ வியாழக்கிழமை (07-03-1991) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 100

சந்திரசேகர் ராஜினாமா

சந்திரசேகர்

காங்கிரஸ் கைவிட்டது

புதுடில்லி, மார்ச் 7

இந்தியப் பிரதமர் எஸ் சந்திரசேகர் தலைமையிலான அரசு நான்கு மாத ஆட்சியின் முடிவில் நேற்று ராஜினாமாச் செய்தது.

எஸ். சந்திரசேகர் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து தமது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

தமக்கு ஆதரவு அளித்து வந்த இந்திரா காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் தம்மால் தொடர்ந்து அரசாங்கத்தை நடத்த முடியாதிருப்பதாக அவர் நாடாளுமன்றத்தில் [லோக சபையில்] நேற்று நண்பகல் கூறினார்.

அதன் பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்து தமது பதவி விலகல் கடிதத்தை அவர் சமர்ப்பித்தார்.

ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி வெங்கட்ராமன் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தொடர்ந்து பிரதமர் பதவியில் நீடிக்கும்படி திரு. சந்திர

[4 ஆம் பக்கம் பார்க்க]

54 எம். பிக்களுடன் 117 நாட்கள் மட்டுமே ஆட்சி!

புதுடில்லி, மார்ச் 7

529 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் 54 எம். பிக்களை மட்டும் வைத்துக்கொண்டு 117 நாட்கள் ஆட்சி புரிந்தார் சந்திரசேகர்.

வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு பதவி கவிழ்ந்ததை அடுத்து, கடந்த நவம்பரில் சிங்கின் ஜனதா தள் கட்சியிலிருந்து 54 எம். பிக்களுடன் சந்திரசேகர் மற்றும் தேவிலால் ஆகியோர் பிரிந்தனர். ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சியை அவர்கள் ஸ்தாபித்தனர்.

210 எம். பிக்களைக் கொண்ட இந்திரா காங்கிரஸ் கட்சி ஆதரவளிக்க முன்வந்ததை அடுத்து சிறுபான்மை அரசு ஒன்றை சந்திரசேகர் ஸ்தாபித்திருந்தார்.

[உ-எ]

சந்திரசேகரின் முடிவு; ராஜீவ் வருந்துகிறார்!

புதுடில்லி, மார்ச்7

"பிரதமர் சந்திரசேகர் பதவிவிலக தீர்மானித்தது ஒருதலைப்பட்சமானது; வருந்தத்தக்கது"—என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி சொன்னார்.

அரசாங்கம் அமைப்பது குறித்து தமது கட்சி நிலைமையை ஆராய்ந்து வருவதாகவும் அவர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"சந்திரசேகர் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை இந்திரா காங்கிரஸ் கட்சி விலக்கவில்லை. தன்னிச்சையாக சந்திரசேகர் இந்த முடிவை எடுத்திருக்கிறார்" — என்றார் அவர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

ராஜீவை வேவு பார்த்ததால் நெருக்கடி முற்றி வெடித்தது

புதுடில்லி, மார்ச் 7

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியின் இல்லத்தை ஹரியானா பொலீஸ் அதிகாரிகள் இருவர் கண்காணித்த செய்தி வெளியானதை அடுத்தே சந்திரசேகர் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது.

இந்தச் செயல் தொடர்பாக சந்திரசேகர் அரசு தீர்க்கமான நடவடிக்கை எடுக்கும் வரை இந்திய நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வது இல்லை என்று இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

அதன்படி நேற்று இடம் பெற்ற லோக சபை, ராஜ்ய சபைக் கூட்டங்களை இந்திரா காங்கிரஸ் கட்சி பகிஷ்கரித்தது.

இதனால் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை லோக சபையில் தொடர்ந்து நடத்த முடியாத நிலை சந்திரசேகர் அரசுக்கு ஏற்பட்டது.

சந்திரசேகரின் [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

ராஜீவ்காந்தி

பொலீஸார் கைது

புதுடில்லி, மார்ச் 7

ராஜீவ் காந்தியில் இல்லத்தில் உளவு வேலை பார்த்ததாகத் கூறப்படும் ஹரியானாவைச் சேர்ந்த இரண்டு பொலீஸ் அதிகாரிகளும் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இளைஞர் காயம்

பருத்தித்துறை, மார்ச் 7

பருத்தித்துறை கடற் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்களை கடற்படையினர் தாக்கினர்.

தாக்குதலுக்கு இலக்கான பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ் கொன்ரென்சீஸ் [30 வயது] என்ற இளைஞர் கைமூட்டு முறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஓ-118]

சதாமின் மகன் உயிருடன்

லண்டன், மார்ச் 7

உள்நாட்டுக் கலவரத்தில் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்ட ஜனாதிபதி சதாமின் புதல்வர் உதேஸ் உயிருடன் இருப்பதாக ராய்ட்டர் செய்தி ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

முச்சந்தி முரளி

போனால் போகட்டும் போடா... இந்தப் பூமியில் [illegible]

இந்தியாவில் மீளதேர்தல்?

ஜனாதிபதி அறிவிப்பார்

புதுடில்லி, மார்ச் 7

சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி அரசு இராஜினாமாச் செய்ததை அடுத்து இந்தியாவில் மீண்டும் பொதுத்தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் அறிவிப்பை ஜனாதிபதி வெங்கட்ராமன் எந்நேரமும் விடுக்கலாம் என்று நேற்றிரவு எதிர்பார்க்கப்பட்டது.

இராஜினாமாச் செய்த சந்திரசேகரின் ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் — அனேகமான எல்லாக் கட்சிகளும் — பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனா

[4 ஆம் பக்கம் பார்க்க]

காங்கிரஸ் அல்லாத கட்சிகள் தேர்தலுக்குக் கோரிக்கை

இந்திரா காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் புதிதாக நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

ஜனதா தள் கட்சித் தலைவர் வி. பி. சிங், சந்திரசேகர் ஆகியோரும் அரசியல் ஸ்திரத்தை ஏற்படுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று கேட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி தலைமையில் 14 கட்சிகளின் தூதுக் குழு ஒன்றும் நேற்று மாலை ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் மகஜர் ஒன்றைக் கையளித்தது. [ஓ-எ]

பாதுகாப்புப் பொறுப்பும் பிரதமர் விஜேதுங்காவிடம்!

கொழும்பு, மார்ச் 7

மறைந்த ரஞ்சன் விஜேரத்னாவின் பாதுகாப்புத் துணை அமைச்சர் பதவி பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்காவுக்கு வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா முன்னிலையில் பாதுகாப்பு துணை அமைச்சர் பதவியை அவர் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து ஏற்றுக் கொண்டார்.

[உ-எ]

நானாட்டானில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச்7

மன்னார் மாவட்டம், நானாட்டானில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஸ்ரீலங்கா பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

சேத விவரங்கள் குறித்து தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [ஓ]

வல்வைக் கடலில் சூடு! இளைஞர் உயிரிழப்பு

நால்வரைக் காணவில்லை

பருத்தித்துறை, மார்ச் 7

வல்வெட்டித்துறை கடற் பிரதேசத்தில் நேற்று அதிகாலை கடற்படையினர் வள்ளம் ஒன்றைத் துரத்திச் சுட்டனர். அந்தப் படகில் இருந்த ஒருவர் உயிரிழந்தார். ஒருவர் காயமடைந்தார். மற்றும் நால்வருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

அதிகாலை 4 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். ஜீவா [28 வயது] என்பவரே உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது. சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் ஆதிகோவிலடியைச் சேர்ந்த எம். முத்துலிங்கம் [56 வயது] என்பவர் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இச்செய்தி எழுதும் வரை கடலில் காணாமற் போன நால்வரும் திரும்பிவரவில்லை. [ஓ-118]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர், போத்தல், பித்தளை, செம்பு, ஸிமெந்து, கோழித்தீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் லேன். யாழ்ப்பாணம். [16045]

தேவை

ஆடவர்களின் உடைகளை சிறந்த முறையில் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த ஆண் அல்லது பெண் தையல் காரர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். விக்ரம் ரெயிலரிங் மாட், 208/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [16052]

தவறிவிட்டது

நடராசா, மனோன்மணி, இராசேஸ்வரி ஆகிய பெயர்களைக் கொண்ட கூப்பன்களைக் கொண்ட கூப்பன் அட்டைகளும், கூப்பன் பொருட்களும் துர்க்கை அம்மன் ஸ்டோர்ஸ் விலுக்கும், அளவெட்டி தெற்கிற்கும் இடையில் தவறிவிட்டது எடுத்தவர்கள் தயவுசெய்து 10ஆம் இலக்கை கடையில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். [16053]

ஒரு கைப்பை பெறுமதி மிக்க பொருள்களுடன் 3-3-91 ஞாயிறன்று கல்வியன்காடு சந்தைக்கும் [புறக்டர் கனகரெத்தினம் வீட்டு முன்பாக] ஆடியபாதம் றோட் நாயன்மார்கட்டுச் சந்திக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் அதனை ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 222, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. [16055]

தவறிவிட்டது

ஞானப்பிரகாசம் தேவதாஸ் ஆகிய எனது அடையாள அட்டை 3-3-91 அன்று குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஞானப்பிரகாசம் தேவதாஸ், 3 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [16058]

காணவில்லை

சிவப்புநிற கன்றுத்தாச்சி பசுமாடு 3-3-91இல் இருந்து காணவில்லை. கொம்பில் கயிறு போட்டபடியும் உடம்பில் [அ. கு.] என்னும் பெயரும் இடப்பட்டுள்ளது. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். B. வாமதேவன் 215/9 இராசாவின் தோட்டம், [அருள் மாதா கோவிலடி] யாழ்ப்பாணம் [16054]

நாடக நூல்கள்

நோர்வே நாட்டு வானொலி நிலையம் நடாத்திய நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் நா சுந்தரம் பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- 19 வானொலி நாடகங்கள். கடையிற்சுவாமி வீதி, யாழ்ப்பாணம். [16047]

ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா, C/o S. சச்சிதானந்தம், கிராம சேவை உத்தியோகத்தர், உடுவில். [உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன்பாக]. [16050]

மரண அறிவித்தல்

இராமசாமி வரதராஜசுந்தரம்

[முன்னாள் ஈண்டபியாவில் கடமையாற்றிய சுந்தரம்]

யாழ் கொட்டடியைச் சேர்ந்த இராமசாமி வரதராஜசுந்தரம் 18-01-91இல் லண்டனில் அகால மரணமானார். இவர் காலஞ் சென்ற பாப்பு நாயுடு இராமசாமி, இராமசாமி கோவிந்தம்மாள் தம்பதிகளின் அன்புமகனும், சண்முகசுந்தரம் [இந்தியா], வயிரவசுந்தரம், கிருஷ்ணசுந்தரம் [சுந்தரம் கூல்பார் யாழ்ப்பாணம்], சிவசுந்தரம் [இந்தியா], யோகசுந்தரம் [கொழும்பு], ராமசுந்தரம் [கொழும்பு], பாலசுந்தரம் [இந்தியா], விஜபலச்சுமி [இந்தியா], ரோகினி [கொழும்பு], வரதலச்சுமி [ராணி], சிறீசாந்தலச்சுமி [சாந்தா], ஆகியோரின் அன்புச்சகோதரனும், சாந்தா நாயுடு [இந்தியா], ராஜாராம்நாயுடு [கொழும்பு] ஆகியோரின அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் லண்டனில் 27-2-91ல் தகனம் செய்யப்பட்டது. வீட்டுக்கிரியைகள் கொழும்பு - 15 இலக்கம் 95 றோட்ரிக்கோ பிளேஸ் மட்டக்குளியில் உள்ள சகோதரியின் இல்லத்தில் 6-3-91ல் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ராமசாமியும்,
குடும்பத்தினரும்.

35, சீனிவாசகம் வீதி,
கொட்டடி.
யாழ்ப்பாணம். [16060]

Northern Province Cancer Society

All Members of the Executive Committee of the N. P. Cancer Society are kindly invited to be present at a Committee Meeting to be held on Sunday 10th March at 9-30 a. m., at the "Sri Sai Ram Clinic" 410, Kankesanturai Road, Jaffna [Opposite my residence], as several important decisions have to be taken.

PRESIDENT.

[C-5816]

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Applications will be received by me from suitable candidates for the following post up to 1991-04-24.

	POST	SALARY
1.	Director of Physical-Education (Age not more than 45 years)	— Temporary Rs. 6000/- fixed per month
2.	Public Health Inspector (Age not more than-40 years)	— Temporary Rs. 2085/- fixed per month + (Variable cost of living allowance and other allowances be paid)

Application forms and particulars for the above post should be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments of this University.

Request for application forms for the above post should be accompanied by a self - addressed stamped envelope of 23 x 10 c.m. in size.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Head of the Institutions.

NOTE: Appointment on contract also will be considered for the above posts
[Age limit is not applicable for contract appointments.]

Applications received after the closing date and the applications on which the particulars are stated illegibly will be rejected.

REGISTRAR.

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991-01-27. [C-5818]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீர வேங்கை

மேஜர் கேடில்ஸ்

தாய் பார்த்திட: 14-05-1966
ஈழம் பூத்திட: 14-02-1987

எமக்கு ஒரு திலீபனானாய் எம்மகனே! எங்கள் தமிழ் ஈழத்துக்குக் கேடில்ஸ் ஆனாய், மேஜரானாய். எத்தனை மதிப்பு இது. எங்களுக்கு மகிமை இது. மூத்தவன் நீ போன வழி கண்டுதானே எமது மற்றச் செல்வனான காண்டீபனும் சென்றிருந்தான். வேங்கையாக அதுவும் எம்மை மதிப்பினிலே ஆழ்த்தியது பெருமையடா! இருவரையும் தமிழீழ விடிவுக்காக ஈந்துவிட்டோம் பூரிப்பே டு; ஆகையினால் உங்களை நாம் இழக்கவில்லை. உள்ளத்திலே ஏற்றிவிட்டோம். ஏங்கவில்லை; இதயத்திலே இனிமை கண்டோம். அன்று உங்கள் இருவரையும் இழந்தபோது அழுதுகின்றோம். கண்களிலே கண்ணீராய்க் கொட்டி நின்றோம்; கதறிநின்றோம். இன்று நாம் அழவே மாட்டோம். கண்ணீராலே சிந்தமாட்டோம் எல்லாமே சிந்தி நாம் முடித்துவிட்டோம். தமிழீழ மண்ணை இன்று நேசித்து உங்களை நம் உள்ளத்திலே ஏற்றுகிறோம் உவகையுடன்.

அப்பா, அம்மா,
அண்ணன், செல்வி, சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

கண்டாவளை. [16056]

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீர வேங்கை

மேஜர் காண்டீபன்

தமிழ்த் தாயுடன்: 15 06-1970
தமிழீழ மண்ணுடன்: 07-03 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலி

முத்தின் முத்தே!
எம்மருஞ் சொத்தே!!



மலர்வு:
1969 - 01 - 27

உதிர்வு:
1991 - 02 - 05

புலி வீரன்
மேஜர் சலீம்

[அல்போன்சஸ் ஜோண் பிறின்ஸ்ரன்]

நித்தம் நினது நினைவால் இங்கு
சித்தம் கலங்கி சிலை போலானோம்
புத்தம் புதிதாய் புலரும் யுகங்கள்
பத்தும் வரினும் மறவோம் நாங்கள்

உனது பிரிவால் துயருறும்:
அம்மா
சகோதரர்கள்: கைமர், பென்றோ, மமான்ஸ்,
சகோதரிகள்: அல்போன்சா, கசில்பா, ஜெலா,
மைத்துனர்: பிலேந்திரன், பிறின்ஸ்,
மைத்துனியர்: ஜெனிவி, கோகிலா, ரட்னா,
மருமக்கள், மக்கள்.

16, 1ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். [16059]

உதயன்

எது வென்று தெரியவேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மாணவருக்கு உணவு முத்திரை வழங்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன. கல்வித் திணைக்களத்தின் அறிவித்தலின் பிரகாரம் இவ்வருடம்[1991] தை மாதம் தொடக்கமே மாணவர்கள் இதற்கு அருகதையுடையவர்கள் ஆகிறார்கள்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் கடந்தமே மாதத்திலேயே மதிய உணவுக்குப் பதிலாக, உணவு முத்திரைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் அது அமுல் செய்யப்படவில்லை. ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கியதை ஒரு சாட்டாக வைத்துத் தமிழர் மாணவருக்கான வசதி நின்றுவிட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்துப் பாடசாலைகளை எடுத்துக் கொண்டால், 1990 மே18 ஆம் திகதியுடன் புழைய திட்டமான மதிய உணவு வசதி நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் மே 19 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் வரை சுமார் 42 நாட்கள் பாடசாலைகள் நடந்தன.

இந்த 42 நாட்களும் ஒரு மாணவன் தவறாது வகுப்புகளுக்குச் சமூகம் கொடுத்திருப்பின் 126 ரூபாவுக்கான உணவு முத்திரை அவனுக்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும். மாவட்டம் முழுவதிலும் உள்ள இரண்டரை லட்சம் மாணவர்களுக்கும் மூன்று கோடி பதினைந்து லட்சம் ரூபா வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதனை அரசு ஏப்பம் விட்டுவிட்டதா?

இது சம்பந்தமாக ஒரு விடயம் தெளிவு படுத்தப்பட வேண்டும் என்று பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

1990 மே 18 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ். மாணவருக்கு உணவு முத்திரை விநியோகம் நிறுத்தப்பட்டதா அல்லது அந்த வசதியை தமிழ் மாணவருக்கு வழங்க முடியாது என்று அரசாங்கம் மறுத்து விட்டதா? நிறுத்துவதும், மறுத்துவிடுவதும்மேலெழுந்தவாரியாகப் பார்க்கப் போனால் ஒன்றாகவே தெரியும். ஆனால் இரண்டுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் உண்டு என்பதை ஆழ்ந்து நோக்கினால் புரியும்.

இது குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள அதிகாரிகளுக்கு உரிய விளக்கம் தெரிந்திருக்கிறதா? அவர்களுக்கும் தெரியவில்லையெனில் கொழும்பில் உள்ள மேலிடத்திடம் கேட்டு நிறுத்தமா, மறுப்பா என்பதை பெற்றோர்களுக்கு தெரியப்படுத்துவது அவர்களின் கடமை.

அரசாங்கம் தமிழ் மாணவருக்குரிய கடந்த வருடத்துக்கான உணவு முத்திரைப் பணத்தைத்தர மறுத்துவிட்டதாகப் பதில் கிடைக்குமானால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பாடசாலைகள்மீது வானத்தாக்குதல்கள், மாணவர், ஆசிரியர்கள், அதிபர்கள் படுகொலைகள் என்பன மூலம் தமிழ் மாணவரின் கல்வி திட்டமிட்டுச் சீரழிக்கப்பட்டு வருகிறது. யுத்த வேளை அதற்குச் சரியாகப் பயன்படுத்தப்படுகிறது. மாணவரின் உணவு முத்திரை வசதி மறுக்கப்பட்டதாக அரசின் பதில் அமைந்தால், தமிழ் மாணவர் கல்விச் சீரழிப்பை அரசாங்கம் தனது வாயாலேயே உறுதி செய்ததாக அமையும் அல்லவா?

செயலகத்திடம் பலகோடி ரூ. நிலுவை; கூட்டுறவுச் சங்கங்கள் கதவடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய பல கோடி ரூபா நிலுவையை யாழ் செயலகம் கடந்த ஒன்பது மாதங்களாக வழங்கவில்லை.

அதனை ஆட்சேபிக்கும் முகமாகமாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அடையாளமாக ஒரு நாள் கதவடைப்புச் செய்ய உள்ளன.

நேற்று முன்தினம் நடத்திய யாழ். தேசியக் கூட்டுறவுச் சபையின் விசேட கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சபையின் தலைவர் திரு.சி. சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ப. நோ. கூ. சங்க முகாமையாளர்களும், தலைவர்களும் கலந்துகொண்டனர்.

கூட்டுறவு ஊழியர்களுக்கான ஆபத்துப்படி, பொருள்கள் கொண்டுசென்ற போக்குவரத்துக் கூலி, டீசல், உணவு முத்திரை போன்றவற்றுக்கான கொடுப்பனவுகள் என்பவற்றின் வகையால் செயலகம் பல கோடி ரூபாவை ப. நோ. கூ. சங்கங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது.

மக்கள் வங்கியிடம் ப,நோ. கூ. சங்கங்கள் பெற்ற கடனுக்கு தொடர்ந்து 18 வீதம் வட்டி செலுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் செயலகம் பணம் வழங்காததால் சங்கங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. [அ-3]

மாணவர் உணவு முத்திரை

பாடசாலை மாணவர்களுக்கான 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய உணவு முத்திரை வழங்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளித்த ஒவ்வொரு நாளைக்கும் 3 ரூபா வீதம் அவர்கள் வரவுக்கு ஏற்ப கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது.

முத்திரைக்குரிய பொருள்களை மாணவர்கள் ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [அ-69]

வித்தியானந்தன் பெயரில் பல்கலைக்கழக புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாண்ம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஞாபகார்த்தமாக, பல்கலைக்கழகத்தில் புலைமைப்பரிசில் ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளது.

பேராசிரியர் வித்தியானந்தன் பெயரில் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்கான முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன— என்று பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தெரிவித்தார்.

பேராசிரியர் வித்தியானந்தன் புலமைப் பரிசில் நிதி அவரது மாணவர்கள், நண்பர்கள் தமிழ் பிமானிகள் பங்களிப்பின் மூலமே உருவாக்கப்பட உள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். [அ]

நிர்மாணத் திணைக்களம் மாகாண சபையின் கீழ்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்கள், பாடசாலைகளுக்கு உரிய கட்டடங்களை நிர்மாணிக்கும் பொறுப்பு நிர்மாணத்துறைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இது வரை இயங்கிய கட்டடத் திணைக்களத்தைக் கலைத்து நிர்மாணத்துறைத் திணைக்களம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. புதிய திணைக்களம் மாகாண சபையின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும்.

யாழ்ப்பாணம். கிளி நொச்சி மாவட்டங்களைப் பொறுத்த வரையில் யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா ஆஸ்பத்திரி தவிர்ந்த ஏனைய அரச கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு நிர்மாணத்துறைத் திணைக்களமே இனிப் பொறுப்பாக இருக்கும். — என்று திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு செ. பரம்சோதி உதயனுக்கு தெரிவித்தார்

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்டங்களுக்குப் பொறுப்பான நிறைவேற்றுப் பொறியலாளராக அண்மையில் பதவியேற்ற திரு. பரம்சோதி நீண்டகால நிர்மாணத்துறை அனுபவமுள்ளவர். சுண்டிக்குளியைச் சேர்ந்தவர். புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சிறந்த விளையாட்டு வீரர். [அ-30]

அதிர்ச்சியால் மரணம்

நெடுந்தீவு, மார்ச் 7

திங்களன்று வேலணையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுச் சம்பவத்தின் போது அதிர்ச்சியால் ஒருவர் மரணமானார்.

சம்பவம் நடைபெற்ற சமயம் குறிகட்டுவானில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்த— நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த — செபமாலை என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மண்கும்பான் வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. [உ-111]

மூலிகைத் தோட்டம் புனரமைப்புச் செய்யப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலையின் மூலிகைத் தோட்டத்தை புனரமைப்புச் செய்ய தமிழீழ ஆயுள்வேத சபை தீர்மானித்துள்ளது.

பிரஸ்தாப ஆயுள்வேத மூலிகைத் தோட்டத்தை புனரமைப்புச் செய்வதன் மூலம் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரிவுக்உட்பட்ட பகுதியில் உள்ள சகல ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கும் மூலிகைகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. [அ-5]

இப்படியும் நடக்கிறது!

நெடுந்தீவு, மார்ச் 7

சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவர், பொம்மர் குண்டு வீசியதைக் கண்டு வீதியில் நிலத்தில் விழுந்து குப்புறப்படுத்தார்.

என்னே ஆச்சரியம்! அவருக்கு சற்றுத்தொலைவில்- சுமார் 20 யார் தூரத்தில்- ஒரு குண்டு விழுந்து வெடித்தது. ஆனால் அவருக்கு எவ்விதகாயமும் ஏற்படவில்லை.

அவ்வாறு தப்பியவர் வேறு எவருமல்லர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வேல் முருகோன் பிள்ளை தான்.

கடந்த திங்கட்கிழமை வேலணை வங்களாவடியில் இச்சம்பவம் இடம் பெற்றது. [அ-111]

மானிப்பாய் மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 7

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறுகிறது. [இ]

மானிப்பாயில் நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளையில் எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 443 குடும்பங்களுக்கு உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிகளுக்குரிய நிவாரணக் கொடுப்பனவாக தலா நாலாயிரம் ரூபா வங்கிக் கட்டளையாக எதிர்வரும் சனிக்கிழமை வழங்கப்படவிருக்கிறது.

கிராம சேவையாளர் பிரிவுகளும், குடும்பங்களின் எண்ணிக்கை விவரமும் வருமாறு.-

சங்கானை வடக்கு - 4, நவாலி - 213. பண்டத்தரிப்பு - 13, மாகியப்பிட்டி-4, மாதகல் - 24, மானிப்பாய் - 115, பெரியவிளான்-39, சுதுமலை - 31 [உ]

பெண்களின் உரிமைக் குரலை உயர்த்திச் சொல்லும் எழுச்சி நாள்

நாளை மார்ச் 8 ஆம் திகதி மகளிர் எழுச்சி தினம் ஆகும். இதனை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி விடுத்த அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

அடக்கப்படும் பெண் இனத்தின் உரிமைக்குரலை உயர்த்திச் சொல்லும் எழுச்சி மிகு நாளாக மார்ச் 8 ஆம் திகதியின் பல பாகங்களிலும் கடந்த 80 வருடங்களாக கொண்டாடப்பட்டு வருகிறது.

எமது நாட்டில் அண்மைக் காலங்களில்தான் இத்தினத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அந்த வகையில் காலா காலமாக ஆணாதிக்க சமூகத்தின் அடக்குமுறைகளில் அகப்பட்டு, அல்லலுற்றுக் கொண்டிருப்பது மட்டும் அல்லாது இனவாத அரசின் இரும்புப் பிடிக்குள்ளும் சிக்கிப்பட்டு, வதைபட்டுக் கொண்டிருக்கும் தமிழீழப் பெண்களின் எழுச்சியைக்காட்டும் நாளாக மார்ச் எட்டாம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

மூடக்கொள்கை

மூடக்கொள்கைகள் எமது பெண்களை மூச்சுத்திணற வைத்துக் கொண்டிருக்கின்றன. சீதனம் இல்லை என்றால், திருமணத்தைப்பற்றி சிந்திக்க வேண்டாம் என சபிக்கப்பட்டு சாகும்வரை வேதனையுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள்; சாதிக் கொடுமையினாலும் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கல்வி பெண்களுக்கு அத்தியாவசியம் என்பதைக்கூட அறியமுடியாத நிலையில் இன்று பல பெண்கள் மூடக் கொள்கைகளாலும், அர்த்த மற்ற மதக்கோட்பாடுகளாலும் வேலைச்சுமைகளாலும் அமுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவற்றால் மட்டுமல்லாமல் இன்னும் பல சமூகக் கொடுமைகளுக்குள்ளாகி அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இனவாத அரசின் அடாத்தும்

இத்தனையும் போதாது என்று இனவாத அரசின் அட்டூழியங்களால் அவலவாழ்வு வாழும் பெண்கள் எண்ணில் அடங்கா தோர். அரச இராணுவத்தால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப் பட்டு, மனம் பாதிக்கப்பட்டு வாழும் பெண்கள் திசைதெரியாக் காட்டில் மறைந்தேனும் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கும் முன்பே அவர்களை இழுத்துச் சென்று தம் இச்சைகளைத் தீர்த்து விட்டுதடயமின்றியே அழித்துவிடுகிறார்கள் சிங்கள இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும்-

சிங்கள, முஸ்லிம் காடையர்களால் கணவனும், பிள்ளைகளும் சித்திரவதைப்பட்டு கொல்லப்பட்டதை தம் கண்ணால் கண்டு மனம் பேதலித்துவிட்ட தென் தமிழீழப் பெண்களின் சோகங்கள் சொல்லுந்தரமன்று.

இத்தனை கொடுமைகள் மட்டும் தான் எமது தமிழீழத்துப்பெண்கள் அனுபவிப்பவை அல்ல. எண்ணில்லா ஒடுக்குமுறைக்குள் அகப்பட்டு, அலைபட்டு, அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

எமது தமிழ்ப் பெண்கள் பெண் இனம் என்பதால் மட்டுமல்ல, தமிழினப் பெண்கள் என்பதாலும் இன, சமூக ஒடுக்குமுறை வடிவங்கள் அனைத்தாலும் தாங்கொணாக் கொடுமைகளை தினம் தினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாயகமீட்புக்காகவும், பெண்ணினத்தின் விடிவுக்காகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு இணைந்து கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதியில் தமிழினத்தைப் பிணித்துள்ள அடிமை விலங்கு மட்டுமல்லாமல் தமிழீழப் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அனைத்து அடக்குமுறைகளும் உடைத்தெறியப்படும். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். ஆஸ்பத்திரிக் குழு கொழும்பு புறப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ் ஆஸ்பத்திரியின் உயர்குழு ஒன்று பணிப்பாளர் தலைமையில் நேற்று கொழும்புக்கு புறப்படடுச் சென்றது.

ஆஸ்பத்திரியின் திருத்த வேலை, அதற்கான நிதி, வைத்திய உபகரண தேவைகள் மற்றும் ஊழியர்களுக்கான சலுகை நியமனப்படி போன்ற விடயங்கள் குறித்து கொழும்பில் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தவே இக்குழு இங்கிருந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தவேளை பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் என். கனகசபையும் கொழும்பு சென்றுள்ளார்.

வைத்தியசாலைகளின் தேவைகள் குறித்து அதிகாரிகளைச் சந்தித்துப்பேச அவர் அங்கு சென்றுள்ளார்

[ஒ-15-3]

ரஞ்சனின் இறுதிக் கிரியை; படையினரே அதிகமாம்!

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற ரஞ்சனின் இறுதிக் கிரியைகளில் எதிர்பார்த்த அளவு பொது மக்கள் கலந்து கொள்ளவில்லை. அரசுக்கு இது பெரும் ஏமாற்றமாகப் போய் விட்டது.

இவ்வாறு ரஞ்சனின் இறுதிக் கிரியைகள் தொடர்பான தனது விமர்சனத்தில் பி.பி.ஸி தெரிவித்தது.

இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிபோரில் அனேகமானோர் முப்படைகளைச் சேர்ந்தோரே என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் படைத் தளபதிகள் உட்பட பல பிரமுகர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

[உ-எ-3]

அமைதிப்படை

வளைகுடாவில் பாதுகாப்பைப் பேண அமைதிகாக்கும் படை ஒன்றை அமைப்பது என்று எட்டு அரபு நாடுகள் நேற்றுக் தீர்மானித்தன.

சர்வதேச மகளிர் தினம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 7

நாளை வெள்ளிக்கிழமை சர்வதேச மகளிர் தினமாகும்.

யாழ். மாவட்டச் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழுவினரால் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தினவிழா நாளை காலை 9.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

[ஒ]

திருச்சியில் இலங்கையர் ஐவர் கைது

திருச்சி, மார்ச் 7

கடவுச் சீட்டுகளோ வேறு ஆவணங்களோ இன்றி திருச்சியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஐந்து இலங்கைத் தமிழர்கள் திருச்சி கோட்டைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சந்திரலிங்கம், ரவீந்திரராஜா [வல்வெட்டித்துறை] பிரதாபன் [கொடிகாமம்], திருநாவுக்கரசு, சிவனேஸ்வரன் [புங்குடுதீவு] ஆகியோரே கைதானவர்கள் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ-3]

ஊழியர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு, வைத்தியசாலை அலுவலகம் தற்போது தற்காலிகமாக இயங்கும் யாழ்ப் பாண மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு வருகை தரும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

[ஒ-15]

2 படையினர் கால் இழந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 7

திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பத்தை முகாமில் இருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினர் பூநகருக்கு ரோந்து சென்ற வேளையில், அங்கு விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி இருவர் கால்களை இழந்தனர். [ஒ]

ராஜீவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பான்மை அரசுக்கு ராஜ்ய சபையிலும் இதே நெருக்கடி ஏற்பட்டது

இதனை அடுத்தே சந்திரசேகர் அரசு பதவி விலகும் நிலை ஏற்பட்டது. [உ-எ]

சந்திரசேகரின்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

உளவு பார்க்கப்பட்ட பிரச்சினை பற்றி தாம் ஜனாதிபதியைச் சந்தித்து பேசியதாகவும், அவ்விஷயமாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்து ஜனாதிபதிக்குத் தாம் எடுத்துக் கூறியதாகவும் திரு. ராஜீவ் காந்தி சொன்னார்.

சந்திரசேகர்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சேகரைக் கேட்டுக்கொண்டார்.

புதிய அரசு ஏதும் அமைக்கப்படாமல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத் தேர்தல் நடக்கும்வரை திரு. சந்திரசேகரே காபந்துப் பிரதமராக செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-எ]

புதிய அரசு அமைக்க காங்கிரஸ் முயற்சிக்காது

புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு உரிமை கோருவதில்லை என்று இந்திரா காங்கிரஸ் கட்சி செயற்குழு நேற்றுத் தீர்மானித்தது.

மக்கள் ஆணை பெற்றே அரசு அமைப்பது என்றும் காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்திருப்பதாக கட்சியின் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

விஜேதுங்காவின் நியமனம்; அமைதித் தீர்வில் நாட்டமா?

கொழும்பு, மார்ச்7

பிரதமர் டிங்கிரி பண்டா விஜேதுங்க புதிய பாதுகாப்புத் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பது இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகளை கொழும்பு அரசு மேற்கொள்ளக் கூடும் என்பதைப் புலப்படுத்துவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

69 வயதான திரு. விஜேதுங்கா மறைந்த 59 வயதான திரு. ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு நேர் எதிரானவர் என்றும், திரு. விஜேரத்தினாவைப் போன்ற கடும் நடவடிக்கைகளை எடுப்பவர் அல்லர் என்றும் செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதைக் கொண்டு பார்க்கும் போது பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலேயே ஜனாதிபதி பிரேமதாஸா நாட்டம் கொண்டுள்ளார் என்று இந்திய வெளியுறவுத்துறை கருதுவதாக வெளித்தாஸ் தெரிவித்தது. [உ-எ]

வடமராட்சிக் கடலில் கடற்படை அட்டகாசம்

பருத்தித்துறை, மார்ச் 7

வடமராட்சிக் கடற் பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் கடற்படைப் பிரிவுப் படகுகள் தாக்குதல்களை நடத்தி அட்டகாசம் புரிந்தன.

தொண்டமானாறு கடற் பரப்பில் இருந்துகுடியிருப்புப் பகுதிகளை நோக்கி அதிகாலை ஆரம்பமான தாக்குதல் மாலை இச்செய்தி எழுதும் போதும்கூட தொடர்ந்த படி இருந்தது.

நாகர்கோவில், குடாத்தனை, மணற்காடு பகுதி மீனவர்களின் படகுகள் மீதும் கடற்படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் மீனவர்கள் தொழிலில் ஈடுபடாது கரைக்குத் திரும்பினர் [ஒ-118]

பிரி. பிரதமர் குவைத்தில்

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் நேற்று குவைத்துக்கு விஜயம் செய்தார். குவைத் விடுதலை பெற்ற பின்னர் அங்கு முதலில் விஜயம் செய்த உலகத் தலைவர் என்ற பெருமை திரு. மேஜருக்குக் கிடைத்தது. பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கைக்குமத்தியில்அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

இந்தியாவில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திபதியைக் கேட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துமாறு இந்திரா காங்கிரஸ் கட்சியும் நேற்று மாலை கோரிக்கை விடுத்தது.

கட்சிகள் எல்லாம் பொதுத் தேர்தலை நடத்துமாறு ஒரே குரலில் கேட்டிருப்பதால் நாடாளுமன்றத்தைக் கலைத்துதேர்தலுக்குத் திகதி நிர்ணயிப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியிலலை என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். [உ-எ-3]

பருத்தித்துறை: நிவாரணம்

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை உற்பத்தித் திறன் முயற்சி நன்கொடை நிவாரணம் [ரூ. 4000/-] வழங்கப்பட உள்ளதாக வங்கியின் முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

நிவாரணம் வழங்கப்பட உள்ள கி. சே. பிரிவுகளும் குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

- ★ மந்திகை — 396
- ★ பருத்தித்துறை — 372
- ★ பரு. கிழக்கு — 47

[ஒ-118-15]

பதவி நீக்கம்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தமது உள்துறை அமைச்சரை நேற்று பதவி நீக்கம் செய்தார். இதற்கான காரணம் வெளியிடப்படவில்லை. உள்நாட்டுக் கலவரம் காரணமாக அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மரண அறிவித்தல்கள்

முத்துச்சாமி மகேஸ்வரன்

[தொலைத் தொடர்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்]

வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான முத்துச்சாமி மகேஸ்வரன் [தொலைத் தொடர்புத் திணைக்களம் – யாழ்ப்பாணம்] 4-3-91 இல் கோண்டாவிலில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற டாக்டர் முத்துச்சாமி-ஞானப்பூங்கோதை தம்பதிகளின் இளைய புதல்வரும், கமல தேவி [ஆசிரியை C. பாடசாலை நீர்வேலி] அவர்களின் அன்புக் கணவரும், பெரியதம்பி கந்தப்பிள்ளை – நீலாட்சி தம்பதிகளின் மருமகனும், டாக்டர் கனகரத்தினம் அவர்களின் பெறாமகனும், டாக்டர் கோபலசுந்தரம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற டாக்டர் ஞானசுந்தரம், சிவசுந்தரம் [ட்ரஸ்ற் குறூப் கொழும்பு], புவனேஸ்வரி, கெங்காஸ்வரி, விமலேஸ்வரி, [சிறுகுடிசைக் கைத்தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்] அவர்களின் அன்புச் சகோதரனும், புலவர் வேல்முருகன் [பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி], பத்மநாதன் [டோகா], இளம்பிறைநாதன் [முகாமையாளர், மக்கள் வங்கி-வவுனியா], கருணாகரன் [கணக்காளர் ட்ரேட்லிங்ஸ் விநியோஸ்தர் யாழ்ப்பாணம்], கருணானந்தன் [ஜேர்மனி], கிருபானந்தன் [U. K], சாந்தா ஜினிதேவி, நிர்க்குணானந்தன் [மணவன்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 5-3-91 செவ்வாய்கிழமை பி.ப. 3 மணிக்கு நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கந்தப்பிள்ளை நிர்க்குணானந்தன்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி. [16057]

டாக்டர் வி. எஸ். தம்பிஐயா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் வி. எஸ். தம்பிஐயா [Retired Superintendent, Vaccine Production, Department of Agriculture] காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெகதீசன் [கணக்காளர்], டாக்டர் ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் லோகேந்திரன், டாக்டர் லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும், வேணி, வதனி, சேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் பாக்கியம், மணிக்கம் பவளம்மா ஆகியோரினதும் சேமசுந்தரம் ஞானம்மா, டாக்டர் வி. எஸ். ஏகாம்பரம், அரியரத்னா அன்னரட்னம், பொன்னுத்துரை, பொன்னம்பலம், வேலாயுதபிள்ளை செல்வரட்னம், புஸ்பராஜா ஜானகியம்மா ஆகியோரினதும் அன்புச் சகோதரனுமவார்.

இறுதிச் சடங்குகள் 6-3-1991 இல் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. ஆர். புஸ்பராஜா [15696]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 3 - 1991 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

புதிய தொழில் பயிற்சி

★ Radio T. V & Video Deck
★ Air Condition & Refrigeration

ஆரம்பம்:- 9 — 3 — 1991

துரித பயிற்சி நெறி
இலகு செய்முறைப் பயிற்சி

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters's Lane,
Hospital Road,
Jaffna.

[சி-5822]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org